<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No.306 /2024**</u>

<u>**வழக்கு சாட்சி PW-4**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவமணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சூசைநாடார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | லாலாகுறிச்சி | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 17th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் லாலாகுறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மாரியை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், இரவு 12.00 மணிக்கு நான் வீட்டில் தூங்கி விட்டேன். காலையில் எதிரியும், அ.சா.1 மாரியும் எங்கள் வீட்டு பக்கமுள்ள ரோட்டில் சண்டை போட்டதாக பேசிக்கொண்டார்கள். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 24.12.2021ம் தேதி, பாஸ்கர் மனைவி மாரியும், சகாயராணியும் சர்ச்சிற்கு செல்வதற்காக எனது வீட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, எதிரி மாரியைப் பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. அதை தட்டிக் கேட்ட

சகாய ராணியை எதிரி கையால் கன்னத்தில் அடித்தார் என்றால் சரியல்ல. பாஸ்கர், ஜான்ஸ் ஆகியோர் சத்தம் போடவும் எதிரி கல்லை எடுத்து எங்களை நோக்கி எறிந்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு அதற்கு மாறாக தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.18 14:21:02 +0530